விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=



# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 354 வள்ளுவர் ஆண்டு 2053 கார்த்திகை 22 வியாழக்கிழமை (08.12.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

# அரசின் சதியில் சிக்க வேண்டாம்

## எதிர்க்கட்சியின் பிரதம கொறடா சபாநாயகருக்கு எச்சரிக்கை



(கொழும்பு)

அரசியலமைப்பு பேரவை உட்பட சுயாதீன ஆணைக்குழுக்களை அமைப்பதற்கு அரசாங்கம் அவசரப்படுவதன் நோக்கம் எங்களுக்கு புரிகின்றது. அதனால் அரசாங்கத்தின் சதித்திட்டங்களில் சபாநாயகர் சிக்கிக்கொள்ளக்கூடாது என எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார். (11ஆம் பக்கம் பார்க்க)

## லிட்ரோ விலை குறைவடையும்

(கொழும்பு)

அடுத்த வருடத்தின் முதல் இரண்டு மாதங்களில் உலக சந்தையில் நிலவும் விலைகளுக்கேற்ப சமையல் எரிவாயு கொள்கலன்களின் விலை குறைவடையக் கூடும் என லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித்த பீரிஸ் தெரிவித்துள் 11

## ஐஸ் போதையுடன் தருமபுரத்தில் ஒருவர் கைது

(கிளிநொச்சி)

ஐஸ் போதைப்பொருளுடன் தருமபுரத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் பொலிஸாரின் வீதி சோதனையின்போது 11

## வெளிநாடு அனுப்புவதாகக் கூறி யாழில் 30க்கு மேற்பட்ட இளைஞர்களிடம் பண மோசடி

(யாழ்ப்பாணம்)

வெளிநாடு அனுப்புவதாகக்கூறி இளைஞர்களிடம் பண மோசடி செய்த சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

இது தொடர்பாக இணைய வழியூடாக பொலிஸ்மா அதிபருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகப் பாதிக்கப்பட்டவர்களில் ஒருவரான வடமராட்சி குடத்தனையைச் சேர்ந்த த.தர்மதாஸ் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில்நேற்று 11

## பாடசாலை மாணவிகளும் போதைக்கு அடிமை

### வெளியானது அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

பாடசாலை மாணவர்கள் மட்டுமன்றிபாடசாலை மாணவிகளும் போதைக்கு அடிமையாகி சிகிச்சை பெற வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

சிறுவர் வைத்திய நிபுணர் தீபால் பெரேரா இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் பழக்கம் முன்னர் நகர்ப்புற பாடசாலைகள் தொடர்பில் மாத்திரம் பதிவாகியிருந்த போதிலும் தற்போது அது 11

## கடற்றொழிலுக்கு செல்ல வேண்டாம்

### மீனவர்களுக்கு எச்சரிக்கை

(மன்னார்)

மன்னாரிலிருந்து காங்கேசன்துறை, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் பொத்துவில் வரையான கடற்பரப்புகளில் மறு அறிவித்தல் வரை கடற்றொழிலுக்கு செல்ல வேண்டாம் என வளிமண்டலவியல் திணைக் 11

## ரணில் அரசை வீழ்த்துவதற்கு ஒருபோதும் துணைபோகமாட்டேன்



### சி.வி.விக்னேஸ்வரன் தெரிவிப்பு

(கொழும்பு)

ரணில் அரசு வீழ்வதற்கு நான் ஒரு காரணமாக இருக்கமாட்டேன் என தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் 11

## இறந்தவர் பெயரில் கள்ள உறுதி

## யாழில் சட்டத்தரணி உட்பட ஐவர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

யாழில் சட்டவிரோதமான முறையில், ஆறு பரப்புக் காணிக்கு பொய்யான உறுதி முடித்த குற்றச்சாட்டின் கீழ் சட்டத்தரணி ஒருவர் உட்பட ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் பொலிஸ் விசேட விசாரணைப் பிரிவினரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

ஓட்டுமடம் பகுதியில் உள்ள குறித்த காணியின் உரிமையாளர் கடந்த 1988ம் ஆண்டு இறந்துவிட்டார்.

இந் நிலையில் குறித்த நபர்

## ஜனவரி முதல் காகிதமற்ற மின்சார பட்டியலும் பற்றுச்சீட்டும் அறிமுகம்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் அனைத்து மின்சார பாவனையாளர்களுக்கும் காகிதமற்ற மின்சார பட்டியலும் பற்றுச்சீட்டும் அறிமுகப் படுத்தப்படும் என மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

வீதி விளக்குகளை பொருத்துதல், அவற்றை இயக்குவதை ஒழுங்குபடுத்துதல் குறித்தும் 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களை விரட்டுவதற்கே வடக்கு, கிழக்கில் இராணுவம்

## சி.வி. விக்னேஸ்வரன் குற்றச்சாட்டு

(கொழும்பு)

தெற்கிலிருந்து தமிழ் மக்களை விரட்டி வெளிநாடுகளுக்கு அனுப்பியமை போன்று, இன்று வடக்கு, கிழக்கில் வாழும் தமிழர்களை வெளிநாடுகளுக்கு விரட்டவும், இடம்பெயரச் செய்யவும் பல நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்கின்றது என தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்னேஸ்வரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

யாழில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றில் இந்த விடயத்தினை தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில், வடக்கு மாகாணத்துக்காக எந்தவொரு பொருளாதார மையங்களையும் அமைக்கப்போவதாக வரவு செலவுத் திட்டத்தில் அரசாங்கம் குறிப்பிடவில்லை.

திருகோணமலையில் ஒரு பொருளாதார மையத்தை அமைக்கப்போவதாகக் குறிப்பிட்டுள்ளார்கள். சிங்களவர்களை அங்கு கொண்டுவந்து அந்த மையத்தை அபிவிருத்தி செய்யப் போகின்றார்கள்.

539 பில்லியன் ரூபா 2023 இல் பாதுகாப்புச் செலவினமாக ஒதுக்கப்பட்டுள்ளது. எல்லா விதத்திலும் மக்களின் வாழ்வாதாரங்களைப் பிடித்து தங்கள் வசம் வைத்துக் கொண்டு சிவில் நடவடிக்கைகளில் ஈடுபட அவர்கள் முயற்சிக்கின்றார்கள்.

539 பில்லியன் ரூபா ஒதுக்குவதற்குக் காரணம் இராணுவத்தை இங்கு வைத்திருந்து வடக்கு மாகாண மக்களை அடக்கி வருங்காலத்திலே பொருளாதார காரணங்களுக்காக அவர்களை விரட்டும் ஒரு நிலையை ஏற்படுத்துவதேயாகும் என தெரிவித்துள்ளார். (ம-7)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழு கூட்டம் இன்று

(கொழும்பு)

2023 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட வாக்கெடுப்பு தொடர்பில் தீர்மானிப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழு இன்று கூடவுள்ளது.

இன்று காலை கூட்டம் நடத்தப்பட்டு அனைத்து பங்காளி அரசியல் கட்சிகளின் ஒருமித்த கருத்துடன் இறுதி முடிவு எடுக்கப்படும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

2023ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு கடந்த மாதம் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சபையில் பிரசன்னமாகியிருக்கவில்லை.

இதன்போது வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு 37 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

இதேவேளை, நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட 2023ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் மீதான இறுதி வாக்கெடுப்பு இன்று பாராளுமன்றத்தில் இடம்பெறவுள்ளது. (ம-7)

# வரவு – செலவு திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு இன்று

வரவு செலவு திட்டத்தின் மூன்றாவது வாசிப்புக்கான வாக்கெடுப்பு இன்று இடம்பெறவுள்ளது.

அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீட்டு குழுநிலை விவாதம் இன்று மாலை நிறைவடைந்தும் மாலை 5.00 மணிக்கு வாக்கெடுப்பை நடத்துவதற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

1979ஆம் ஆண்டின் 61ஆம் இலக்க அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் கீழ், ஜனாதிபதியால் வெளியிடப்பட்ட 2022.12.03ஆம் திகதிய 2308/62 இலக்க வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளையைப் பாராளுமன்றத்தின் அனுமதிக்காக அன்றைய தினம் சமர்ப்பிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம-7)

### சீனா உறுதியளித்தால் ஜனவரியில்

# சர்வதேச நாணய நிதியத்தின் நிதியுதவிக்கான அனுமதியை பெறமுடியும்

## மத்திய வங்கி ஆளுநர்



(கொழும்பு)

டிசெம்பர் மாதத்துக்குள் கடன் மறுசீரமைப்புக்கான உறுதிமொழியை சீனா வழங்கினால், ஜனவரி மாதத்துக்குள் சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) நிதியுதவிக்கான அனுமதியைப் பெறமுடியும் என்று இலங்கை எதிர்பார்ப்பதாக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

இலங்கை பொருளாதார உச்சி மாநாடு 2022 இல் உரையாற்றியபோதே மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

சீனாவின் உறுதிமொழியைப் பெறுவதற்கு இலங்கை தற்போது செயற்பட்டு வருவதாகத் தெரிவித்த அவர், கடன் மறுசீரமைப்புக்கான ஆதரவில் இலங்கையின் கடன் வழங்குநர்களுடன் பொதுவான ஒருமித்த கருத்தைப் பெறுவதே முன்னுரிமை என்று குறிப்பிட்டார்.

நவம்பர் மாதத்துக்குள் சீனாவின் உறுதிமொழியைப் பெறுவதற்கு முதலில் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், தாமதத்தின் பின்னர் சீனாவுடனான கலந்துரையாடல் ஆரம்பிக்கப்பட்டதாக அவர் கூறினார்.

சீனாவின் உறுதிமொழிகளைப் பெறுவதில் தாம் ஈடுபட்டுள்ளதாகவும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளதாகவும் குறிப்பிட்ட அவர், இலங்கைக்கு ஆதரவாக பாரிஸ் கிளப் மற்றும் இந்தியா ஏற்கனவே உறுதி அளித்துள்ளன என்று சுட்டிக்காட்டினார்.

திட்டமிட்டபடி நவம்பரில் சீனாவின் உத்தரவாதம் கிடைத்திருந்தால், நிதி உதவிக்கான ஐ.எம்.எப் பணிப்பாளர் சபையின் அனுமதி டிசெம்பரில் கிடைத்திருக்கும் என்றார். (ம-7)


# மரண அறிவித்தல்

## திருமதி இலட்சுமி வேலுப்பிள்ளை



மாவடி, சாரையடி, புலோலி தெற்கு, புலோலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இலட்சுமி வேலுப்பிள்ளை அவர்கள் (நேற்று) 07.12.2022 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - தெய்வானை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னத்தம்பி - வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும் சுகுமாரன், சுபத்திரா ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, இராசையா, இந்திரா ஆகியோரின் அன்பு மைத்துனியும் அன்பு மலர், சிவபாதசுந்தரம் ஆகியோரின் அன்பு மாமியும் சிவாகினி, சுவாகினி, துவாரகன், காருண்யா, கிசோர், தமிழினி, யாழினி, ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (08.12.2022) வியாழக்கிழமை அஞ்சலிக்காக அன்னாரின் இல்லத்தில் வைக்கப்பட்டு பி.ப ஒரு மணியளவில் ஈமக்கிரியைகள் இடம்பெற்று தகனக் கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
077 346 4998

(C-5446)


# கோட்டாவின் தீர்மானத்தால் சுமார் 6 பில்லியன் நட்டம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டதும், ஜப்பானின் நிதியுதவியுடன் கூடிய இலகு ரயில் போக்குவரத்து திட்டத்தை உடனடியாக நிறுத்தியதால் நாட்டுக்கு 5,978 பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கணக்காய்வாளர் நாயகத்தின் விசேட கணக்காய்வு அறிக்கையின் மூலம் இந்த தகவல் வெளியாகியுள்ளது.

2020 செப்டெம்பர் 21ஆம் திகதி கோட்டாபய ஜனாதிபதியின் அப்போதைய செயலாளரால் வழங்கப்பட்ட கடிதத்தைத் தொடர்ந்து, ஜப்பானின் இந்த திட்டம் பொருத்தமான செலவு குறைந்த போக்குவரத்து தீர்வாக இல்லை என்று குறிப்பிட்டு, அது இடைநிறுத்தப்பட்டது.

ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம், 12 வருட சலுகைக் காலம் உட்பட 40 வருட காலப்பகுதியில் இந்த திட்டத்துக்கான கடனைச் செலுத்தும் வசதியை வழங்கியிருந்தது.


இதற்கான வருடாந்த வட்டி வீதம் 0.1 சதவீதமாக இருந்தது.

இதேவேளை 2021 டிசம்பர் 31ஆம் திகதிக்குள் இந்த திட்டம் தொடர்பில் 604 மில்லியன் ரூபாவை நிலுவையாக செலுத்தவேண்டியிருந்தது.

எனினும் இன்னும் அது செலுத்தப்படவில்லை. (ம-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# செம்மணியில் ஆட்சி செய்யும் சிவனுக்கு நேற்றைய தினம் திருக்குடமுழுக்கு







நல்லூர் இராசதானியின் நுழைவாயிலான செம்மணிச் சந்தியில் சிவபூமி அறக்கட்டளை அமைப்பினால் மீளுருவாக்கம் செய்யப்பட்ட சிவலிங்கப் பெருமானுக்கு கார்த்திகை விளக்கீடான நேற்றைய தினம் காலை வேளை திருக்குடமுழுக்கு நடத்தி வைக்கப்பட்டது.

செஞ்சொற்செல்வர் கலாநிதி.ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ரிஷி தொண்டுநாத சுவாமிகள், கந்தர்மடம் சிவகுருநாத பீடத்தின் பீடாதிபதி சுவாமி வித்தியாசாகர் ஆகியோர் திருக்குடமுழுக்கை நடத்தி வைத்தனர். இந்நிகழ்வில் சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தம் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

(படங்கள் சிவசாந்தன், கஜிந்தன்)

# போதைக்கு அடிமையான பெற்றோர்; 12,000 சிறுவர்கள் காப்பகங்களில்

## மருத்துவர் தீபால் அதிர்ச்சித் தகவல்

**(கொழும்பு)**

**இலங்கையில் தமது பெற்றோர்கள் போதைப் பொருளுக்கு அடிமையான நிலையில், சுமார் 12,000 இற்கும் மேற்பட்ட சிறுவர்கள் தற்போது காப்பகங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.**

அவர்களில் பெரும்பாலோர் துஷ்பிரயோக சம்பவங்களுக்கு உள்ளானவர்கள் என சீமாட்டி ரிட்ஜ்வே மருத்துவமனை ஆலோசகர் மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பெற்றோர்கள் போதைக்கு அடிமையானவர்கள் என்பதால் பெரும்பாலான குழந்தைகள் தங்கள் பாட்டி அல்லது தாத்தாவுடன் மருத்துவமனைக்கு வருகின்றனர்.

பாடசாலை மாணவர்களிடையே போதைப்பொருள் தொடர்பான அனைத்து பழக்கங்களும் பயங்கரவாதத்தை விட மிகவும் ஆபத்தானது. இந்தச் சூழ்நிலைக்கு எதிராக மக்கள் அனைத்துப் போராட்டங்களையும் பிரசாரங்களையும் ஆரம்பிக்க வேண்டும்.

ஐஸ் போதைப்பொருள் பாடசாலை மாணவர், மாணவிகளிடையே வேகமாகப் பரவி வருகிறது.

இதனால் மாணவர் சமுதாயத்தினரிடையே போதைக்கு அடிமையானவர்களின் எண்ணிக்கையும் வேகமாக அதிகரித்து வருகிறது.

இன்றைய நாட்களில் பாடசாலை மாணவிகளை பாடசாலை கிரிக்கெட் போட்டிகளின் போது பீர் குடிக்க வைப்பது அதிகரித்துள்ளது.

இறுதியில் அவர்கள் ஏதோ ஒரு வகையில் போதைக்கு அடிமையாகி விட்டனர். அவர்களில் சிலர் ஐஸ் பாவனையை நோக்கி இழுக்கப்படுகின்றனர் என்றும் தீபால் பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

இந்த அச்சுறுத்தல் பரவினால், நாட்டின் பொறுப்புகளை ஏற்க அடுத்த தலைமுறையே இருக்காது என்றும் அவர் தெரிவித்தார். (நி)

# மருந்து தட்டுப்பாட்டால் கண் சிகிச்சைகள் முடக்கம்

(கொழும்பு)

தற்போதைய மருந்துத் தட்டுப்பாட்டினால் கண் சிகிச்சை முடங்கிப்போயுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதனால், கண் மருத்துவமனை மற்றும் கண் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படும் சகல மருத்துவமனைகளும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளதாக மருத்துவ சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இது குறித்து சங்கத்தின் மத்திய குழு உறுப்பினர் மருத்துவர் பிரசாத் கொலம்பகே கூறுகையில்,

'கண் வில்லைகளுக்கான தட்டுப்பாடு மற்றும் சத்திர சிகிச்சைக்கு தேவையான உபகரணங்களின் பற்றாக்குறை காரணமாக கண் சத்திர சிகிச்சைகளை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அரச மருந்துக் களஞ்சிய சாலையிலும் தனியார் துறையிலும் குறித்த மருந்துப் பொருட்களுக்கு கடுமையான தட்டுப்பாடு நிலவுகிறது' எனத் தெரிவித்தார். (நி)

# சபுகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையம் மீண்டும் ஆரம்பம்

(கொழும்பு)

தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சபுகஸ்கந்த எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தின் செயற்பாடுகளை மீள ஆரம்பிக்க, மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

இதற்கமைய, எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் குறித்த செயற்பாடுகள் மீள ஆரம்பிக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

மசகு எண்ணெய் ஏற்றிய இரு கப்பல்கள் நாட்டை வந்தடைந்துள்ள நிலையில், மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு இந்த முடிவினை எடுத்துள்ளது.

2 இலட்சம் மெற்றிக் தொன் மசகு எண்ணெய் நாட்டிற்குக் கிடைக்கப் பெற்றுள்ள நிலையில், மற்றுமொரு கப்பல் இன்னும் சில தினங்களில் நாட்டை வந்தடையும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது. (நி)

# இன்னும் சில தினங்களில் அமைச்சரவையில் மாற்றம்?

(கொழும்பு)

அமைச்சரவையில் இன்னும் சில தினங்களில் மாற்றங்கள் இடம்பெறும் என அரசியல் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி சுகாதாரம், போக்குவரத்து, மின்சாரம் மற்றும் எரிசக்தி ஆகிய அமைச்சுப் பதவிகளில் மாற்றம் மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ராஜித சேனாரத்ன, குமார வெல்கம மற்றும் துமிந்த திஸாநாயக்க ஆகியோருக்கு அமைச்சுப் பதவிகள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாகவும் அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தற்போது அமைச்சுப் பதவிகளை வகிக்கும் கெஹலிய ரம்புக்வெல்ல, பந்துல குணவர்தன மற்றும் காஞ்சன விஜேசேகர ஆகியோருக்கு மாற்று அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இன்னும் சில இராஜாங்க அமைச்சர்களும் விரைவில் பதவியேற்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சுப் பதவிகளை வழங்குவது தொடர்பான கலந்துரையாடல்கள் தற்போது இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.


இதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தும் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்வரும் தினத்தில் அரசாங்கத்துடன் இணைந்து தமது ஆதரவை வெளிப்படுத்தவுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

இதன்படி ஐக்கிய மக்கள் சக்திக்கு ஆதரவளிக்கும் சிறு கட்சிகளின் பல தலைவர்களுக்கும் எதிர்காலத்தில் அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### தேசிய மட்ட தட்டெறிதல் போட்டி

# பரு.ஹாட்லிக் கல்லூரி மாணவன் புதிய சாதனை



அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட ஆண்களுக்கான தட்டெறிதல் போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவன் எஸ்.மிதுன்ராஜ் புதிய சாதனையைப் பதிவு செய்து இவ்வாண்டு நடைபெற்ற தேசிய மட்ட போட்டியில் புதிய சாதனையைப் பதிவு செய்த வடமாகாண வீரர் என்ற சாதனையையும் பதிவு செய்துள்ளார்.

அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட மெய்வல்லுநர் போட்டிகள் கொழும்பு சுகததாஸ விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றன. இதில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை நடைபெற்ற 20 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான தட்டெறிதல் போட்டியில் 2017 ஆம் ஆண்டு எமிலிப் பிட்டிய ரத்னலோகா மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த என்.பி.எல்.கே.பத்திரானவினால் 43.85 மீற்றர் எறிந்த தூரத்தை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.மிதுன்ராஜ் 45.47 மீற்றர் தூரம் எறிந்து புதிய சாதனையைப் பதிவு செய்துள்ளார். (4-6-90)

### உலகக் கிண்ண கால்பந்து

# போர்த்துக்கல், மொராக்கோ காலிறுதிக்கு தகுதி



கட்டார் பிபா கால்பந்து உலகக்கிண்ணத் தொடரின், 16 சுற்றுப் போட்டிகளில் வெற்றி பெற்று போர்த்துக்கல் மற்றும் மொராக்கோ அணிகள் காலிறுதிக்கு முன்னேறியுள்ளன.

எடிவுகோஷன் சிட்டி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில், மொராக்கோ அணியும் ஸ்பெயின் அணியும் பலப் பரீட்சை நடத்தின.

இப்போட்டியில், மொராக்கோ அணி 3-0 என்ற பெனால்டி சூட்அவுட் முறையில் ஸ்பெயின் அணியை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறியது.



லூசைல் மைதானத்தில் நடைபெற்ற மற்றைய போட்டியில், போர்த்துக்கல் அணியும் சுவிஸ்லாந்து அணியும் மோதின.

இப்போட்டியில், போர்த்துக்கல் அணி 6-1 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

எதிர்வரும் 10 ஆம் திகதி அல்துமானா மைதானத்தில் நடைபெறவுள்ள காலிறுதிப் போட்டியில், போர்த்துக்கல் அணியும் மொராக்கோ அணியும் பலப்பரீட்சை நடத்தவுள்ளன. (4)



தேசிய ரீதியிலான, பாடசாலைகளுக்கிடையிலான 5000 மீற்றர் ஓட்டப்போட்டி நேற்று முன்தினம் காலை கொழும்பு சுகததாச விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இந்த போட்டியில் கிளி/ முழங்காவில் தேசிய பாடசாலையின் மாணவனான சுமன் கீரன் என்ற மாணவன் முதலாவது இடத்தினைப் பெற்று, வரலாற்றில் முதன் முறையாக தேசிய மட்டத்தில் சாதனை படைத்துள்ளார்.

(படம்-கஜிந்தன்)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2740

### தாருஸ்




### றியாத்




### தியாஷ்





### றியானி




### துஷானா




### மயூஷா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# றிமோட் பற்றியின் விலை 350 ரூபாவாக அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டின் பொருளாதாரம் கீழ் மட்டத்தில் காணப்படும் நிலையில் அனைத்துப் பொருட்களின் விலைகளும் பல மடங்கு சடுதியாக அதிகரித்துள்ளது. சாதாரண மக்கள் ஒருவேளை உணவுக்கே அல்லல்படுகின்றனர்.

இந்த நிலையில் ரீவி றிமோட் உள்ளிட்ட இலத்தி ரனியல் சாதனங்களுக்குப் பயன்படுத்தும் சிறிய பற்றிகளின் விலை சடுதியாக அதிகரித்துள்ளது.

ஒரு சோடி பற்றி ஆரம்பத்தில் 50 ரூபாவிற்கு விற்கப்பட்ட நிலையில் தற்போது 350 ரூபாய் வரை விலை அதி கரித்துள்ளது. (நி)

# கொவிட் பரிசோதனை சான்றிதழ் அவசியமில்லை

(கொழும்பு)

வெளிநாட்டிலிருந்து இலங்கை வரும் பயணிகளுக்கு விதிக்கப்பட்டிருந்த கொவிட் விதிமுறைகள் தளர்த்தப்பட்டுள்ளன.

வெளிநாட்டில் இருந்து இலங்கை வருபவர்கள் பூரணமாக கொவிட் தடுப்பூசி செலுத்தியமைக்கான சான்றிதழை சமர்ப்பித்தல் உள்ளிட்ட விதிமுறைகள் தளர்த்தப்படுவதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

நேற்று முதல் அமுலாகும் வகையில் இந்த விதிமுறைகள் தளர்த்தப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (நி)

# தேர்தல் தொடர்பான வர்த்தமானி ஜனவரியில் வெளியிடத் திட்டம்

## தேர்தல்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை அடுத்த வருடம் ஜனவரி மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் வெளியிடுவதற்கு திட்டமிட்டுள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அடுத்த வருடம் மார்ச் 20 ஆம் திகதிக்கு முன்னர் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்த முடியும் என ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வாக்காளர் பட்டியலைத் தயாரிக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆணையாளர் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (நி)


# பெறுகை அறிவித்தல்
# மாந்தை கிழக்கு பிரதேச சபை, பாண்டியன்குளம்.
# தனியார் பாதுகாப்புச் சேவை-2023

1. மாந்தை கிழக்கு பிரதேச சபையின் உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழுத் தலைவரால் இலங்கை பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்த தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து அட்டவணையில் விபரிக்கப்பட்ட சேவைக்காக கேள்வி கோரப்படுகின்றது.

2. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **செயலாளர்,மாந்தை கிழக்கு பிரதேச சபை,பாண்டியன்குளம் தொலைபேசி :- 021 228 3475 தொலைநகல்: 021 228 3476** இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் 08.12.2022 முதல் காலை 09.00 மணியிலிருந்து மாலை 02.00 மணி வரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.

3. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **தவிசாளர்,மாந்தை கிழக்கு பிரதேச சபை,பாண்டியன்குளம்** எனும் இடத்திலிருந்து **08.12.2022** ஆம் திகதியிலிருந்து **22.12.2022** வரை வேலை நாட்களில் காலை **09.00** மணிக்கும் மாலை 01.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.**1,000.00** (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

4. கேள்வி ஆவணங்கள் **தலைவர்,உள்ளூர் அதிகார பெறுகைச் சபை,மாந்தை கிழக்கு பிரதேச சபை, பாண்டியன்குளம்** எனும் முகவரிக்கு 22.12.2022 ஆம் திகதி மாலை 02.30மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவரது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

5. கேள்விப்பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அமையும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | ஒப்பந்தக் காலம் | பிணை வைப்பு | தேவையான ஆளணி எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | இரவு | பகல் |
| 1 | NP/14/44(2)/03/Sec.Ser/2023 | பாதுகாப்பு சேவை | 1 வருடம் | 10,000.00 | 01 | 01 |

6. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை முழுமையாக அல்லது பகுதியாக நிராகரிக்கவோ ,மீள் கேள்வி கோரவோ பெறுகைக் குழுத்தலைவருக்கு அதிகாரம் உண்டு.

ம.தயானந்தன்
தலைவர்,
உள்ளூர் அதிகார பெறுகைச் சபை,
மாந்தை கிழக்குப் பிரதேச சபை,
பாண்டியன்குளம்.

08.12.2022

(சி-6437)



பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாள் செயற்பாடு - 2022
16 Days of Activism against Gender Based Violence
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)

"பெண்களுக்கெதிரான வன்முறை ஒரு கலாசாரம் அல்ல, அது ஒரு குற்றம். சமத்துவம் என்பது உடனடியாகப் பெற முடியாததொன்று, அதற்கு நாம் இப்போதிலிருந்தே போராட வேண்டும்."

(சி-5323)

JSAC

16 2022

யாழ் சமூக செயற்பாட்டு மையம் | Jaffna Social Action Center (JSAC)


# இராசிபலன்

08.12.2022
கார்த்திகை 22, வியாழக்கிழமை
பூரணை முற்பகல் 9.38 மணிவரை

ரோகினி பிற்பகல் 12.57 மணிவரை
சுபநேரம் -07.47-09.17 மணிவரை
இராகுகாலம் - 01.47-03.17 மணிவரை

விநாயகர்
விரத ஆரம்பம்

வளவன்

**மேஷம்** தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**கடகம்** வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் வாய்ப்புண்டு, உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்.

**துலாம்** மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது.

**மகரம்** ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், சுப செய்திகள் வந்து சேரலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**ரிஷபம்** உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், கற்பனை மிகுதியான நாள்.

**சிம்மம்** செய்தொழில் மேன்மையுண்டு, குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், சந்தோசம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள்.

**விருச்சிகம்** தெய்வீகச் சிந்தனை மேலோங்கும் நாள், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள்.

**கும்பம்** சுப தகவல்கள் வந்து சேரலாம், பெற்றோர் மீது பிரியம் கூடும், தேடிச் சென்ற நபர் உங்களின் இல்லம் தேடி வரலாம், சுப விரயங்கள் கூடும் நாள்.

**மிதுனம்** அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், சுபவிரயங்கள் கூடும் நாள்.

**கன்னி** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர், பிரிந்து சென்றவர்கள் பிரியமுடன் வந்திணைவர்.

**தனுசு** புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், கடன் சுமை குறைய புதிய வழியைக் கையாள்வீர்கள், போசன சுகமுண்டு.

**மீனம்** பகை விலகி பாசம் கூடும் நாள், தொழில் முயற்சியில் எதிர்பார்த்த சில திருப்பங்களைக் காணலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள்.

தினமும் காலையில் நடந்தால் எல்லா வியாதிகளையும் விரட்டி விட முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளித்தர கண்காணிப்பு நிலையம் யாழில் நேற்று திறந்து வைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் நிறுவப்பட்ட வளித்தரக் கண்காணிப்பு நிலையம் நேற்று புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டது. மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைமையில் இலங்கைக்கான உலக சுகாதார நிறுவனத்தின் நிதியுதவியுடன் சுற்றுப்புறக் காற்று தரக் கண்காணிப்பு நிலையம் யாழ்ப்பாணம் மாநகர சபையினால் நிறுவப்பட்டது.

இதன் நினைவுக்கல்லை யாழ். மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் திறந்து வைத்ததுடன் வளித்தரக் கண்காணிப்பு நிலைய பொறிமுறையை சுற்றாடல் அமைச்சின்



செயலாளர் மருத்துவ நிபுணர் அனில் ஜாசிங்ஹ ஆரம்பித்து வைத்தார்.

இந் நிகழ்வில், மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவர் சுபுன் எஸ்.பத்திரகே, மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பணிப்பாளர் பி.ஹேமந்த ஜெயசிங்கே, உலக சுகாதார நிறுவனத்தினைச் சேர்ந்த கலாநிதி வேர்கிங் மல்லவராச்சி, யாழ்.மாவட்ட மேலதிக செயலாளர் ம.பிரதீபன், மத்திய சுற்றாடல் அதிகார சபையின் உதவிப் பணிப்பாளர் து.சுபோக்ரன், வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டிலீப் லியனகே, யாழ்.போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி, யாழ்.மாநகர ஆணையாளர் இ.த.ஜெயசீலன், மாநகர சபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (4-6-33)


## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை கரவெட்டி

**நெல்லியடி நவீன சந்தை புதிய கட்டிடத் தொகுதியிலுள்ள கடைகள் மற்றும்**

**சாண்டா சந்தை கடைகள் வாடகைக் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல்-2023**

கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்ட கடைகளினை உள்ளூராட்சித் திணைக்களத்தின் 1980/46 ம் இலக்க சுற்றறிக்கைக்கு அமைவாக ஆகக்கூடிய கேள்வித்தொகையினை ஒரே முறையில் இச்சபைக்கு செலுத்துபவர்களுக்கு 01.01.2023 தை மாதம் தொடக்கம் வாடகைக் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் என்னால் கோரப்படுகின்றது.

01. கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :- **08.12.2022**
02. கேள்விப் பத்திரம் வழங்கும் இறுதி திகதி :- **20.12.2022 பி.ப 3.00 மணிவரை**
03. கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதி :- **21.12.2022 காலை 10.00 மணிவரை**
04. கேள்விகள் திறக்கப்படும் திகதி :- **21.12.2022** காலை **10.30** மணிக்கு.
05. கேள்விப் படிவங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு. மூலப்பிரதி அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரும் கடை இலக்கமும் தெளிவாக எழுதப்பட்டு உரிய தினத்திற்கு முன்னர் எமக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்ட கேள்விப் பெட்டியில் இடுவதன் மூலமாகவோ சேர்க்கப்படல் வேண்டும். அதன் இரண்டாவது பிரதி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம். யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.
06. கேள்விப் பத்திரங்கள் பெற விரும்புபவர்கள் அவர்களது அடையாள அட்டையை கொண்டு வருவதுடன். கிராம சேவகரினால் உறுதிப்படுத்தப்பட்ட அதன் நிழற்படப் பிரதியையும். கிராம அலுவலரால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பிக்க வேண்டும்.
07. தலைமை அலுவலகத்தில் ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்தி படிவக்கட்டணம், மீளளிக்கப்படும் வைப்பு பணம் என்பவற்றைச் செலுத்தி கேள்விப்படிவத்தினை பெற்றுக்கொள்ளலாம்.
08. கேள்வி நிபந்தனைகள். அறிவுறுத்தல்களுக்கு அமைய கேள்விக் கோரிக்கைகளை சமர்ப்பிக்கபடாது விடின் காரணம் காட்டாது கேள்வி மனு நிராகரிக்க பிரதேச சபையின் பெறுகைக்குழுவிற்கு பரிபூரண அதிகாரம் உண்டு.
09. கேள்வி திறக்கப்படும் நாளன்று பிரதேச சபையால் நிர்ணயிக்கப்பட்ட ஆகக் குறைந்த கேள்வித் தொகையை விட குறைந்த கேள்வி இடுதல் சமர்ப்பிக்கப்படின் எதுவித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படுவதுடன். அவர்களது கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படவும் மாட்டாது.
10. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது சபையின் முன் அங்கீகாரம் பெற்று எழுத்து மூலமாக நியமிக்கப்பட்ட அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
11. விலை மதிப்பீட்டு திணைக்களத்தினால் அதியுச்சமாக 05 வருடங்களுக்கு ஒரு முறை அல்லது சபையால் தேவைப்படுத்தப்படும் காலத்தில் வாடகைப்பணம் மீளாய்வு செய்யப்படும். இம்மாற்றத்திற்கேற்ப மாதாந்த வாடகைக் கட்டணம் மாற்றப்படும். அதனை பிரதேச சபையால் நிர்ணயிக்கப்பட்ட காலத்தில் செலுத்துதல் வேண்டும்.
12. சமூக அமைப்புக்களும் கூட்டுத்தாபனங்களும் கூட்டுறவுச்சங்கங்களும் இக்கேள்வி நடைமுறைக்கமைவாக் விண்ணப்பிக்கலாம்.
13. சமனான கேள்வித்தொகை சமர்ப்பிக்கப்படும் இடத்து வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசத்தை நிரந்தர வதிவிடமாக கொண்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
14. வாழ்வாதாரத்தை நோக்கமாகக் கொண்டு அமைக்கப்பட்ட கடைகள் ஆதலினால் ஏற்கனவே வேறு கடைகளிற்கு உரிமையாளராக இருப்பவர்களுக்கு இக்கடை வழங்கப்படமாட்டாது.
15. மாதாந்த வாடகைப்பணத்தை அடுத்து வரும் மாதம் 10 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்துதல் வேண்டும். அவ்வாறு செலுத்தத் தவறின் கட்டுப்பணத்தின் 10 % (சதவீதம்) தண்டப்பணமாக செலுத்துதல் வேண்டும். தொடர்ந்து இரு மாதங்களிற்கு வாடகைப்பணங்களைச் செலுத்தத் தவறுவோரது ஒப்பந்தம் தன்னியல்பாகவே இரத்துச் செய்யப்படும்.
16. பிரதேசசபையின் நாளதுவரையான கறைநிரற் பட்டியலில் காணப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்பட மாட்டாது. அவ்வாறு தவறுதலாக தங்களால் படிவம் பெறப்பட்டதாக கண்டறியப்படின் அக்கேள்விப்பத்திரம் எதுவித முன் அறித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.
17. கடையை குத்தகைக்கு பெற்றுக் கொள்பவரே அக்கடைக்கான மின் இணைப்பை இலங்கை மின்சார சபை மூலம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதுடன் மாதாந்த மின்பட்டியல் கட்டணத்தையும் குத்தகைதாரரே செலுத்துதல் வேண்டும்.
18. இந் நிபந்தனைகளுக்கு மேலதிகமாக. தெரிவு செய்யப்பட்ட குத்தகைக்காரர் சபையுடன் செய்து கொள்ளும் குத்தகை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட வேண்டிய பொறுப்புடையவராகின்றார்.

மேலதிக விபரங்களினை வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் சனி. ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 8.30 மணி முதல் பி.ப 3.00 வரை பெற்றுக்கொள்ளலாம். அல்லது எமது 021 – 226 3271 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்

**நெல்லியடி நவீன சந்தை, சாண்டாசந்தை கடைகள் கேள்வி அட்டவணை**

| தொ.இல | கடை இல | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திர கட்டணம் | மாத வாடகை |
|---|---|---|---|---|---|
| நெல்லியடி நவீன சந்தை கடைகள் | | | | | |
| 01 | இல 01 | 2,400,000:00 | 24,000.00 | 1000.00 | 10,000.00 |
| 02 | இல 02 | 2,400,000.00 | 24,000.00 | 1000.00 | 10,000.00 |
| 03 | இல 03 | 2,400,000.00 | 24,000.00 | 1000.00 | 10,000.00 |
| சாண்டா சந்தை கடைகள் | | | | | |
| 01 | இல 01 | 960,000.00 | 9,600.00 | 1,000.00 | 4,000.00 |
| 02 | இல 02 | 960,000.00 | 9,600.00 | 1,000.00 | 4,000.00 |
| 03 | இல 03 | 960,000.00 | 9,600.00 | 1,000.00 | 4,000.00 |

**தலைவர் /பெறுகைக் குழு**
**வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை,**
**கரவெட்டி.**

(C-5438) **08.12.2022**


# ஒருங்கிணைக்கப்பட்ட ஊடகச் செய்தியறை

## யாழ்.பல்கலையில் ஆரம்பித்து வைப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் 'ஒருங்கிணைக்கப் பட்ட ஊடகச் செய்தியறை' நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை உத்தியோகபூர்வமாக ஆரம் பித்து வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்கும் சுவிட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த ஹெல்வெற் றாஸ் நிறுவனத்துக்கும் இடையேயான புரிந்துணர்வு ஒப்பந் தத்தின் அடிப்படையில் இது அமைக்கப்பட்டது. ஊடகக் கற்கைகள் துறை மாணவர்கள், அச்சு ஊடகங்கள், தொலைக் காட்சி, வானொலி மற்றும் இணைய ஊடகங்களில் ஒரு சேரப் பயிற்சி பெறுவதற்கான வசதிகளையும் உபகரணங்க ளையும் கொண்டதாக செய்தி யறை அமைக்கப் பட்டுள்ளது.

ஹெல்வெற்றாஸ் நிறுவனம் இலங்கையின் ஸ்ரீஜயவர்த் தனபுர பல்கலைக்கழகம், பேரா தனைப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆகிய மூன்று பல்கலைக்கழகங்களில் முன்னெடுக்கும் சிந்தனை அரும்புகளங்களை உருவாக்கும் திட் டத்தின் ஒரு அங்கமாக இது ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. (4-6-33-104)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக்கூட்டமும் நிர்வாக சபைத்தெரிவும் எதிர்வரும் 11 ஆம் திகதி 2 மணிக்கு சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (4)



யாழ்.மாவட்ட விவசாயக் குழுக்கூட்டம் அரசாங்க அதிபர் க.மகேசன் தலைமையில் நேற்று முன்தினம் காலை யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. (படம்:-சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னிப் பெருநிலப்பரப்பில் மீண்டும் அரியதொரு தமிழ்க் கல்வெட்டு கண்டுபிடிப்பு

வவுனியா, வடக்கு பெரியமடுப் பகுதியைச் சேர்ந்த த.சசிகரன், ப.செந்தூரன், வி.ஜெகதீஸ்வரன், இ.நகுலேஸ்வரன் மற்றும் வ.கிந்துஜன் ஆகியோர் அண்மையில் தமது நெற் காணிகளுக்கு காட்டு வழியூடாகச் சென்று வரும் போது அக்காட்டில் அழிவடைந்த சிறிய கேணிக்கு அருகிலுள்ள கல் தூண் ஒன்றை அடையாளம் கண்டனர்.

அக்கல் தூணில் புராதன எழுத்துக்கள் சில இருப்பதை அவதானித்த அவர்கள் அதுபற்றிய புகைப்படத்தை எமது தொல்லியல் பட்டதாரிகளான சுதர்சன் தம்பதியினருக்கு அனுப்பி வைத்தனர். அதன் முக்கியத்துவத்தைப் புரிந்து கொண்ட அவர்கள் அப்புகைப்படத்தை எனக்கு அனுப்பி வைத்தனர்.

அப் புகைப்படத்தில் உள்ள எழுத்துக்கள் ஏறத்தாழ 800 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ்க் கல்வெட்டுக்குரியவை என்பதை உறுதிப்படுத்திய நாம் தொல்லியல் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியுடன், பிராந்திய தொல்லியல் திணைக்கள ஆய்வு உத்தியோகத்தர்களான வ.மணிமாறன் மற்றும் பா.கபிலன் ஆகியோருடன் பெரியமடுப் பிரதேசத்திற்கு சென்றிருந்தோம். அங்கு சென்றபோது கல்வெட்டுக்களை அடையாளம் கண்ட அன்பர்களும் சுதர்சன் குடும்பத்தினரும் கல்வெட்டுக் காணப்பட்ட இடத்திற்குச் செல்வதற்கான ஒழுங்குகளையும் செய்து தந்தனர்.

இக்கல்வெட்டு வவுனியா வடக்கில் நெடுங்கேணியின் தென்னெல்லையில் உள்ள பெரியமடுப் பிரதேசத்தின் நயினாமடு கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கு உட்பட்ட கோடலி பறிச்சான் என்ற காட்டுப் பகுதியில் காணப்படுகின்றது. இவ்விடத்தை இங்குள்ள சிறிய நடை பாதையில் இருந்து அடர்ந்த காடுகள் ஊடாக நீண்ட நேரக் கால்நடைப் பயணத்தின் பின்னரே அடைய முடிந்தது. இவ்விடத்திற்கு மிக அருகில் பாழடைந்த சிறிய கேணியொன்று காணப்படுகின்றது.

அக்கேணியைச் சுற்றி பொழிந்த வெள்ளைக் கருங்கல் தூண்கள் நாட்டப்பட்டுள்ளன. இவை இங்கிருக்கும் கேணியின் தொன்மையையும் அதன் வரலாற்று முக்கியத்துவத்தையும் புலப்படுத்துவதாக இருந்தது.

இவ்விடத்தின் சுற்றாடலில் பாழடைந்த சில குளங்களும் சிறிய மண் மேடுகளும் அடர்ந்த காட்டு மரங்களுடன் சில புளிமரங்களும் இலுப்பை மரங்களும் காணப்படுகின்றன. அவற்றிடையே அரிதாக சில செங்கட்டிகளும் சிலவகை மட்பாண்ட ஓடுகளும் காணப்பட்டன.

இவை முன்னொரு காலத்தில் இவ்விடங்களில் செறிவான மக்கள் குடியிருப்புகள் இருந்ததற்குச் சான்றாகும். ஆகவே இவ்வாதாரங்களின் பின்னணியிலேயே இக்கல்வெட்டின் வரலாற்று முக்கியத்துவத்தை ஆராய்ந்து பார்க்க வேண்டியுள்ளது.

இக்கல்வெட்டு ஒரே வெள்ளைக் கருங்கல்லில் பீடத்துடன் இணைந்ததாகச் செதுக்கப்பட்டு இங்கிருக்கும்



கேணிக்கு அருகில் நாட்டப்பட்டிருந்துள்ளது. ஆயினும் தற்போது அக்கல்வெட்டுப் பாகம் மூன்று துண்டங்களாக உடைந்து கேணிக்கு அருகிலேயே காணப்படுகின்றன.

அவற்றுள் 70 செ.மீ. உயரமும் 24 செ.மீ. அகலமும் கொண்ட கல்வெட்டின் பீடம் தனித்துண்டாகக் காணப்படுகின்றது. இதற்கு அருகில் 164 செ.மீ. உயரமும் 20 செ.மீ. அகலும் கொண்ட எழுத்துப் பொறிக்கப்பட்டுள்ள கல்லின் பாகமும் இன்னொரு துண்டமாகக் காணப்படுகின்றது. இக்கல்வெட்டில் மேற்பாகத்தில் மங்கலச் சொல்லுடன் தொடங்கியிருக்க வேண்டிய இரண்டு அல்லது மூன்று வரிகள் கொண்ட கல்வெட்டின் பாகம் உடைந்த அல்லது உடைக்கப்பட்ட நிலையில் உள்ளது.

ஆயினும் அப்பாகத்தை இதுவரை கண்டுபிடிக்க முடியவில்லை. 164 செ.மீ. உயரம் கொண்ட கல்லின் நான்கு பக்கங்களில் ஏறத்தாழ 63 வரிகளில் எழுத்துப் பொறிப்புகள் காணப்படுகின்றன. 16 வரிகள் கொண்ட நான்காவது பக்கச் சாசனத்தின் (எழுத்துப் பொறிப்புகளில்) சில வரிகளின் எழுத்துக்கள் தேய்வடைந்து காணப்படுவதால் அவற்றைச் சரியாக வாசிக்க முடியவில்லை.

அவ் வரிகளை மீண்டும் முறையாகப் படியெடுக்கும் போது இக் கல்வெட்டின் நான்கு பக்க சாசனங்களின் வாசிப்பும் முழுமை பெறலாம்.

இக் கல்வெட்டை அடர்ந்த காட்டினுள் மழையும் இருட்டும் தொடர்ந்த நிலையில் யானைகள் வந்து விடுமோ என்ற அச்சத்துடன் குறுகிய நேரத்திலேயே படியெடுக்க வேண்டியிருந்தது. இந் நிலையில் இக்கல்வெட்டை அடையாளம் காட்ட உதவிய அன்பர்களின் கடின உழைப்பினாலும் அவர்கள் கொடுத்த தன்னம்பிக்கையாலும் எமது தொல்லியல் பட்டதாரிகளின் முழுமையான பங்களிப்புடன் இக்கல்வெட்டு படியெடுத்து முடிக்கப்பட்டமை இவ்விடத்தில் சிறப்பாக நினைவு கூரத்தக்கது.

இவ்வாறு படியெடுக்கப்பட்டவற்றின் புகைப்படங்களை படிப்பதற்கும் அதுபற்றிய கருத்துக்களை அறிவதற்கும் வெளிநாடுகளில் வசிக்கும் எனது ஆசிரியர்களான பேராசிரியர் கா.இந்திரபாலா, பேராசிரியர் வை.சுப்பராயலு, பேராசிரியர் பொ.இரகுபதி, கலாநிதி. இராஜகோபால் ஆகியோருக்கு அனுப்பி வைத்தேன்.

அக்கல்வெட்டுப் படிகளை பேராசிரியர் வை.சுப்பராயலு, பேராசிரியர் பொ.இரகுபதி ஆகியோர் தனித்தனியாகப் படித்து எனக்கு அனுப்பி வைத்தனர். அவர்களின் வாசிப்பை யிட்டு பேராசிரியர் இந்திரபாலாவும் தனது திருப்தியை மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்தியிருந்தார். அவர்களின் வாசிப்பின் முக்கிய அம்சங்களை இவ்விடத்தில் சுருக்கமாகக் குறிப்பிடலாம்.

ஜெயபாகு தேவரது பன்னிரண்டாவது ஆட்சியாண்டின் போது வட கரை நாட்டு மூன்று கை திரு வேளைக்காரர் பிரிவைச் சேர்ந்த மதிமான் பஞ்சரத்தெரிந்த வில்லிகள் என்ற படைப் பிரிவு வீரர்கள் இங்கிருந்த கோயிலின் அம்பலம் (மடம்), பொகொறோணி (சிறுகுளம்), கிணறு ஆகிய



வற்றின் பொறுப்பை ஏற்றுக் கொண்டனர் என்பதும் இவற்றைச் செய்தவன் மூவேந்த வேளான் என்ற பட்டம் கொண்ட அதிகாரி என்பதும் தெரிய வருகின்றது.

மேலும் இக்கல்வெட்டின் இரண்டாம் மூன்றாம் பக்கங்களில் இப் படைப்பிரிவில் இருந்த படை வீரர்களின் பெயர்களும் இடம்பெற்றுள்ளன. அவற்றில் ஒரே பெயர் பல படை வீரர்களுக்குரிய பெயர்களாகக் காணப்படுகின்றன. அப் பெயர்களாக :

1.--இர 2. க்கன் 3. இரக்கன் 4.



பேராசிரியர் ப.புஸ்பரட்ணம்
(யாழ்.பல்கலைக்கழகம்)

பெரியான் 5.இரக்கன் 6. புத்தை 7. நெட்டுர் 8. ஆதித்தந் 9. கொடி 10. சோழன் 11. சாத்தன் 12. கண்டந் 13. கூத்தந் 14. ஏறன் சு 15. ந்தன் 16. சாத்தன் 17. சாத்தி 18. சாத்தன் 19. அம்மணி 20. சாத்தன் 21.இரக்கந் 22. கண்டந் 23. அம்பலம் 24. சோழன் அ 25. முதி ஆகிய பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இக்கல்வெட்டில் இருந்து அறியப்படும் வரலாற்றுச் செய்திகள் இடைக்கால வட இலங்கையின் வரலாறு பொறுத்தும் தமிழர் வரலாறு பொறுத்தும் எழும் கேள்விகளுக்கு விடை கூறும் புதிய செய்திகளைத் தருவதாக இருக்கும். இக் கல்வெட்டில் வரும் ஜெயபாகு என்ற பெயரில் பொலநறுவை இராசதானி காலத்தில் மூன்று சிங்கள மன்னர்கள் ஆட்சி புரிந்துள்ளனர். அவர்கள் வெளியிட்ட ஆறு கல்வெட்டுகள் இதுவரை கிடைத்துள்ளன.

இதேவேளை ஜெயபாகு என்ற பெயர் கொண்ட ஒருவனை பாளி, சிங்கள இலக்கியங்கள் தமிழ் மன்னன், தமிழ்ச் சிற்றரசன், பொலநறுவையில் கலிங்கமாகனுடன் இணைந்து ஆட்சி புரிந்த துணையரசன் எனவும் அவனிடம் நாற்பதாயிரம் படை வீரர்கள் இருந்ததாகவும் கூறுகின்றன.

ஆயினும் பாளி, சிங்கள இலக்கியங்கள் கூறும் ஜெயபாகுவும் கல்வெட்டில் வரும் ஜெயபாகு மன்னனும் ஒருவனா என்பது கல்வெட்டின் காலத்தைச் சரிவர வரையறுத்ததன் பின்னரே கூற முடியும். இக்கல்வெட்டில் வடகரை நாடு பற்றிய குறிப்பு காணப்படுகின்றது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின்

பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர்

46



குடந்தை சோதிடரின் வீடு அந்த நகரின் ஒரு மூலையில் காளி கோயிலுக்கு அருகில் ஒரு தனித்த இடத்தில் இருந்தது. குடந்தை நகருக்குள் புகாமலேயே நகரைச் சுற்றிக் கொண்டு ரதம் அந்த வீடு சென்று அடைந்தது.

ரத சாரதி ரதத்தைத் தங்கு தடையின்றி அங்கே ஓட்டிக் கொண்டு போய்ச் சேர்த்ததைப் பார்த்தால், அவன் அதற்கு முன் பலமுறை அங்கே ரதம் ஓட்டிக் கொண்டு சென்றிருக்க வேணும் என்று தோன்றியது.

வீட்டு வாசலில் சோதிடரும் அவருடைய சீடர் ஒருவரும் ஆயத்தமாகக் காத்திருந்தார்கள். சோதிடர் மிக்க பக்தி மரியாதையுடன் வந்தவர்களை வரவேற்று உபசரித்தார்.

"பெருமாட்டி! கலைமகளும் திருமகளும் ஒருருவாய் வந்த தாயே! வரவேண்டும்! வரவேணும்! இந்த ஏழையின் குடிசை செய்த பாக்கியம், மறுமுறையும் தாங்கள் இக்குடிசையைத் தேடி வந்தீர்கள்!" என்றார். "சோதிடரே! இந்த வேளையில் தங்களைத் தேடிக் கொண்டு வேறு யாரும் இங்கு வரமாட்டார்



கள் அல்லவா?" என்றாள் குந்தவை.

"வரமாட்டார்கள், தாயே! இப்போதெல்லாம் என்னைத் தேடி அதிகம் பேர் வருவதே இல்லை. உலகத்தில் கஷ்டங்கள் அதிகமாகும் போது தான் சோதிடர்களைத் தேடி மக்கள் அதிகமாக வருவார்கள்.

- இப்போது தங்களுடைய திருத் தந்தை சுந்தரச் சோழரின் ஆட்சியில், குடிகளுக்குக் கஷ்டம் என்பதே கிடையாது. எல்லோரும் சுக சௌக்கியங்களுடன் சகல சம்பத்துக்களையும் பெற்றுச் சந்தோஷமாக வாழ்கிறார்கள். என்னைத் தேடி ஏன் வருகிறார்கள்?" என்றார் சோதிடர்.

"அப்படியானால் எனக்கு ஏதோ கஷ்டம் வந்திருப்பதனால் தான் உம்மைத் தேடி வந்திருக்கிறேன் என்று சொல்லுகிறீராக்கும்!"

"இல்லை, பெருமாட்டி! இல்லவே இல்லை! நவநிதியும் கொழிக்கும் பழையாறை மன்னரின் திருக் குமாரிக்குக் கஷ்டம் வந்தது என்று எந்தக் குருடன் தான் சொல்லுவான்! உலகத்தில் மக்களுக்குக் கஷ்டமே இல்லாமற் போய்விட்டபடியால், இந்த ஏழைச்சோதிடனுக்கு மட்டும் கஷ்டம் வந்திருக்கிறது.

இவனை மட்டும் கவனிப்பார் இல்லை. ஆகையால், இந்த ஏழையின் கஷ்டத்தைத் தீர்ப்பதற்காக அம்பிகையைப் போல் வந்திருக்கிறீர்கள். தாயே! குடிசைக் குள்ளே வந்தருள வேண்டும். இங்கேயே தங்களை நிறுத்தி வைத்திருப்பது நான் செய்யும் அபசாரம்!" என்று சோதிடர் சமத்காரமாகப் பேசினார்.

ரதசாரதியைப் பார்த்துக் குந்தவை, "ரதத்தைக் கோயிலுக்குச் சமீபம் கொண்டு போய் ஆலமரத்தின் நிழலில் நிறுத்தி வை!" என்றாள். பிறகு சோதிடர் வழிகாட்டி முன் செல்ல, குந்தவையும் வானதியும் அவ்வீட்டுக்குள்ளே சென்றார்கள்.

சோதிடர் தம் சீடனைப் பார்த்து, "அப்பனே! வாசலில் ஜாக்கிரதையாக நின்று கொண்டிரு; தப்பித் தவறி யாராவது வந்தாலும் உள்ளே விடாதே!" என்று எச்சரித்தார்.

அரசகுமாரியை வரவேற்பதற்கு உகந்ததாகச் சோதிடரின் கூடம் அழகு செய்யப்பட்டிருந்தது. சுவரில் ஒரு மாடத்தில் அம்பிகையின் படம் அலங்கரிக்கப்பட்டு விளங்கியது. அமருவதற்கு இரண்டு பீடங்கள் சித்தமாயிருந்தன. குத்துவிளக்கு எரிந்தது, அங்குமிங்கும் கோலங்கள் பொலிந்தன. இராசிச் சக்கரங்கள் போட்ட பலகைகளும் ஓலைச் சுவடிகளும் சுற்றிலும் இரைந்து கிடந்தன.

பெண்மணிகள் இருவரும் பீடங்களில் அமர்ந்த பிறகு, சோதிடரும் உட்கார்ந்தார். "அம்மணி! வந்த காரியம் இன்னதென்பதைத் தயவு செய்து சொல்லி அருள வேணும்!" என்றார். (தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

## அளவில்லையே!

(நேற்றைய தொடர்ச்சி)

அது கண்டு ஏழை எழுந்து "ஐயோ! என் வேர்க்கடலை போயிற்றே" என்று அலறினான். வீட்டுக்காரன் வந்து விடயத்தைத் தெரிந்து கொண்டு "ஒரு வேர்க்கடலைக்காக இந்த ஆர்ப்பாட்டம்?" என்று கேட்டான்.

ஏழையோ "அது சக்தி வாய்ந்த வேர்க் கடலை. உன் கோழி அதை விழுங்கி விட்டதே" எனவே வீட்டுக்காரன் "என்னால் என்ன செய்ய முடியும்? நீ கூறும் சக்தி வாய்ந்த உன் வேர்க் கடலையைக் கொடுக்க முடியாது. வேண்டுமானால் அந்தக் கோழியை எடுத்துப் போ. பிடித்துத் தருகிறேன்" என்றான்.

ஏழை அதற்குச் சம்மதித்து அவன் பிடித்துக் கொடுத்த கோழியை வாங்கிக் கொண்டு அடுத்த ஊருக்குப் போனான். அப்போது இரவாகி விட்டது. அவன் ஒரு வீட்டிற்குப் போய் அன்றிரவு தங்க இடம் கேட்கவே அந்த வீட்டுக்காரன் அவனை வரவேற்று உணவளித்து படுக்க இடம் அளித்தான். அவனும் தன் கோழியை பக்கத்தில் வைத்துக் கொண்டு படுத்துத் தூங்கினான்.

அவன் மெய்மறந்து தூங்கிக் கொண்டிருக்கும் போது அந்தக் கோழி ஓடிப்போய் அந்த வீட்டிலுள்ள மற்ற கோழிகளோடு சண்டையிட்டது. மற்ற கோழிகள் அதனை அடித்துத் துரத்தவே அது ஓடி ஒரு முரட்டுக் கன்றின் காலடியில் சிக்கி மிதிபட்டு இறந்து போயிற்று.

இந்த ஏழை "என் தங்கக் கோழி போய் விட்டதே" என்று புலம்பவே அந்த வீட்டுக்காரன் கோழியைக் கொன்ற முரட்டுக் கன்றைக் கொடுத்து சமாதானப்படுத்தி அனுப்பி வைத்தான். அவன் அதைப் பிடித்து இழுத்துக் கொண்டு வேறொரு ஊரை அடைந்தான். அப்போதும் இரவாகி விட்டது.

அவன் ஊர் எல்லையில் தென்பட்ட ஒரு பெரிய வீட்டில் நுழைந்து "ஐயா! நான் வெகு தூரத்திலிருந்து வருகிறேன். இவ்வூரில் எனக்குத் தெரிந்தவர் யாருமில்லை. இன்றிரவு இங்கே தங்க அனுமதியுங்கள்" என்று சற்று துணிவாகவே கேட்டான். அந்த வீட்டுக்காரனும் "ஐயோ



பாவம்! வெளியூர்க்காரனா நீ? இந்த ஊரில் யாரையும் தெரியாது என்கிறாய். சரி. இரவில் தங்க இடம் கொடுக்கிறேன்" என்று கூறி அவனுக்கு இடம் கொடுத்தான்.

அன்று அந்த வீட்டில் ஏதோ ஒரு விசேஷம். அதனால் பல உறவினர்கள் வந்திருந்தார்கள். பெரிய விருந்தும் நடந்தது. எழையும் அதில் கலந்து கொண்டு நன்கு சாப்பிட்டான். அவனது முரட்டு கன்று கட்டப்பட்டிருந்த கட்டை அவிழ்த்துக் கொண்டு ஓடி குதிரை லாயத்திலிருந்த புல்லைத் தின்றது. அப்போது அங்கிருந்த குதிரை தன் பின்னங்காலால் கன்றை பலமாக உதைக்கவே அது துடித்து விழுந்து இறந்தது.

ஏழை அந்த வீட்டுக்காரனுடன் சண்டையிடவே அந்த வீட்டுக்காரன் வீண் தகராறு எதற்கு என எண்ணித் தன் குதிரையை ஏழைக்குக் கொடுத்து அனுப்பி விட்டான். ஏழையும் குதிரை மீதமர்ந்து பட்டணத்தை நோக்கிச் சென்றான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனியொரு விதி செய்வோம் அதை எந்நாளும் காப்போம். தனி ஒருவனுக்கு உணவு இல்லை யெனில் ஜகத்தினை அழித்திடுவோம்.

– மகாகவி பாரதியார்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அயல் வீட்டில் அடுப்பு எரிகிறதா? என்றொருகால் பார்த்து உண்க!

பத்தில் மூன்று குடும்பங்கள் போதுமான உணவை உண்பதில்லை என ஐ.நா சபை வெளியிட்டுள்ள தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உண்மையில் இந்தத் தகவல் அதிர்ச்சிக்குரியதன்று.

மாறாக ஐ.நா சபை சரியான தகவல்களைப் பெற்றுக்கொள்ளுமாயின், கணிசமான குடும்பங்கள் வறுமையில் வாடுகின்றன. ஒரு நேர உணவைக்கூட உண்ண முடியவில்லை என்ற உண்மை உணரப்படும்.

ஆம், பொருளாதார நெருக்கடிக்குள் வீழ்ந்துள்ள இலங்கையில் உணவுப் பொருட்களுக்கான விலைகள் பன்மடங்கு அதிகரித்துள்ளன.

ஒரு இறாத்தல் பாணின் விலை 200 ரூபாயைக் கடந்துவிட்டது எனும்போது, மதிய உணவுப்பொதி 400 ரூபாய் என்றான பின்பு, ஒரு பால் தேநீரின் விலை 150 ரூபாயுக்கு வந்துவிட்டபோது ஏழை மக்கள் என்னதான் செய்ய முடியும்.

உணவுப் பொருட்களின் விலைகள் குறைவாக இருந்தகாலத்தில்கூட, மூன்று நேர உணவுக்கு அல்லல்பட்ட மக்கள் இந்த நாட்டில் இருந்தனர்

இந்தநிலையில் உணவுப்பொருட்களின் விலைகள் ஐந்து ஆறு மடங்கால் அதிகரித்த போது, அந்த மக்கள் தங்களின் உணவுத் தேவைக்கு என்னதான் செய்ய முடியும்.

எனினும் இந்த உண்மையை உணர்வதற்கு ஆட்சிப்பீடத்தில் ஆளில்லை.

ஆம், அறுசுவை உணவை உண்டு ஏப்பமிடுகின்றவர்களால் – ஏழை மக்களின் அவலத்தை புரியாதவர்களால் உணவின்றி மக்கள் வாடுகின்றனர் என்ற செய்தியை ஒரு போதும் உணர முடியாது.

உண்மையில் வறுமையின் அடிப்படைகளை அனுபவித்த ஒருவரால் மட்டுமே வறுமையின் கொடுமைகளை உணர முடியும்.

உண்மை. ஏழைக் கவிஞன் பாரதி பசியின் கொடுமையை உணர்ந்தான். அதனால் வயிற்றுக்குச் சோறிடல் வேண்டும் இங்கு வாழும் மனிதருக்கெல்லாம் என்று அறைகூவல் விடுத்தான்.

இதுபோல வறுமையின் தாற்பாரியத்தை உணர்ந்த ஒளவையார் கொடிது கொடிது இளமையில் வறுமை கொடிது என்றார்.

ஆனால் எங்கள் நாட்டில் ஆட்சித் தரப்பில், அரசியல் பீடத்தில், அமைச்சுக்களின் நிர்வாகத்தில் இருப்பவர்கள் வறுமை என்றால் என்ன? என்று கேட்கவல்லவர்கள் இவர்கள் பொதுமக்களின் சொத்துக்களைச் சூறையாடி இந்த நாட்டை கந்தறுநிலைக்குக் கொண்டு சென்றவர்கள் – அவ்வாறு கொண்டு சென்றவர்களைப் பாதுகாப்பவர்கள்.

இவர்கள் நாட்டைப் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்போம் என்று சூளுரைக்கின்றனர்.

எனினும் நாட்டின் சொத்தை யார் கபளீகரம் செய்தார்களோ அவர்களிடம் இருந்து அத்தனை சொத்தும் பறிமுதல் செய்யப்பட்டு அவை நாட்டின் தேசிய சொத்தாக்கப்படும் என்று சபதமெடுக்கவில்லை எனும்போது இவர்களால் இந்த நாடு உய்யுமா என்ன?

ஆக, பிணம் தின்னும் கழுகுக் கூட்டங்கள் இருக்கும்வரை இந்தநாடு உய்யப்போவதில்லை.

அதற்காக ஏழை மக்கள் உணவின்றிப் பசி கிடப்பதை இந்த நாட்டின் குடிமக்கள் ஒரு போதும் அனுமதிக்கக்கூடாது.

ஆகவே என் அயல் வீட்டார் சமைக்கிறார்களா? அவர்களின் அடுப்பு எரிகிறதா? என்று ஒருகால் பார்த்துவிட்டு உங்களுக்கான உணவில் கைவையுங்கள். அதுபோதும்.

# மனித உரிமைகள் தினமன்று வடக்கு-கிழக்கில் போராட்டம்

## அனைவரையும் பங்கேற்குமாறு உறவுகள் அழைப்பு

(குருமன்காடு)

**மனித உரிமைகள் தினமான நாளை மறுதினம் 10 ஆம் திகதி வவுனியாவில் முன்னெடுக்கவுள்ள ஆர்ப்பாட்டப் பேரணியில் அனைத்துத் தரப்பினரையும் கலந்து கொண்டு தமக்கு நீதி கிடைக்க குரல் கொடுக்குமாறு வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் சங்கத்தின் செயலாளர் சி.ஜெனீற்றா தெரிவித்துள்ளார்.**

வவுனியா ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில், மனித வுரிமை மீறல் சம்பவங்கள் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன. காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி வழங்கப்படாமை, அரசியல் கைதிகள் விடுவிக்கப்படாமை, காணிகள் சுவீகரிப்பு என அவை நீண்டு செல்கின்றது.

இதன் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கோரி மனித உரிமைகள் தினமான 10 ஆம் திகதி வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களினால் ஆர்ப்பாட்ட பேரணி ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

குறித்த பேரணியினை காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், மனித உரிமை அமைப்புகள் மற்றும் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் இணைந்து வடக்கு- கிழக்கில் முன்னெடுக்கவுள்ளனர்.

இதன்படி கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு கல்லடி பாலத்தில் பேரணி ஆரம்பிக்கப்பட்டு காந்தி பூங்காவில் முடிவடையவுள்ளது. அதே போன்று வடக்கில் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக வவுனியா கந்தசுவாமி கோவிலில் பேரணி ஆரம்பிக்கப்பட்டு பஜார் வீதியினூடாக பழைய பேருந்து நிலையத்தில் முடிவடைகின்றது.

இப்பேரணிக்கு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், அரசியல் கைதிகளின் உறவினர்கள், வர்த்தகர்கள், தமிழ் தேசியத்தினை நேசிக்கும் அரசியல்கட்சிகள், பல்கலைக்கழ மாணவர்கள், இளைஞர்கள், சமூக ஆர்வலர்கள் என அனைவரும் கலந்துகொண்டு பாதிக்கப்பட்டுள்ள எமக்கு நீதி கிடைக்க உறுதுணையாக இருக்க வேண்டும் எனவும் தெரிவித்தார். (4-6-285)

## உர விநியோகம் இடம்பெற்றுள்ளதால் அரிசியை இறக்குமதி செய்ய வேண்டிய தேவை ஏற்படாது

### அமைச்சர் மகிந்த அமரவீர

(கொழும்பு)

பெரும்போகத்திற்குத் தேவையான உர விநியோகம் இடம்பெற்றுள்ளதாக விவாதத்தில் கலந்து கொண்ட அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

வரவு-செலவுத்திட்ட குழுநிலை விவாதத்தின் 12ஆவது நாளான நேற்று முன்தினம் உரையாற்றிய-அமைச்சர் மகிந்த அமரவீர, உர விநியோக நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

எதிர்காலத்தில் அரிசியை இறக்குமதி செய்ய வேண்டிய தேவை ஏற்பட மாட்டாது. சோள உற்பத்தியாளர்களுக்கும் உரம் வழங்கப்படுகிறது. விவசாயிகளுக்கு 20 ஆயிரம் ரூபா பெறுமதியான சேதனப் பசளையும் விநியோகிக்கப்படுகிறது.

ஒரு ஹெக்டேயரை விட குறைந்த நிலங்களுக்கான உர விநியோகம் இலவசமாகும். அறுவடைக் காலப்பகுதியில் எரிபொருள் இலவசமாக வழங்கப்படவிருக்கிறது. நெல்லின் விலை தொடர்பில் சிக்கல்கள் காணப்படுவதாகவும் கூறினார். (ம-7)

## யாழ். இந்துக் கல்லூரியின் 2024 உயர்தர விஞ்ஞான பிரிவிற்கான அனுமதி

(யாழ்ப்பாணம்)

வன்னி பிரதேசம், கிழக்கு மாகாணம் மற்றும் மலையக பகுதிகளை சேர்ந்த பொருளாதார ரீதியில் பின் தங்கிய உயர்தர விஞ்ஞான பிரிவில் கல்வி கற்க ஆர்வமுள்ள மாணவர்கள் எமது பாடசாலையில் இணைந்து கல்வி கற்பதற்கான ஓர் சந்தர்ப்பத்தினை யாழ் இந்துக் கல்லூரி ஏற்படுத்தி தருகின்றது. அவர்களுக்கான விடுதி வசதியினை இலவசமாக வழங்குதுடன் பாடசாலை நேரத்திற்கு மேலதிகமான கற்பித்தல் நடவடிக்கையினையும் மேற்கொள்வதற்கு எமது ஆசிரியர்கள் தயாராகவுள்ளனர். 2024 உயர்தர பிரிவிற்கு 30 மாணவர்களுக்கான அனுமதி வழங்கப்படவுள்ளது. எனவே ஆர்வமுள்ள மாணவர்கள் விண்ணப்பிக்கவும். விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய மின்னஞ்சல் முகவரி principal@jhc.lk (ம-7)

## பூஸா சிறைச்சாலையில் 5 தொலைபேசிகள் மீட்பு

(கொழும்பு)

காலி - பூஸா சிறைச்சாலையின், விஷேட பிரிவிற்கு உள்நுழையும் பகுதியில் புதைக்கப்பட்டிருந்த, ஐந்து கையடக்க தொலைபேசிகள் மீட்கப்பட்டுள்ளன.

அத்துடன் சிம் அட்டைகள், மின்னேற்றி என்பனவும் மீட்கப்பட்டதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சிறைச்சாலை வளாகத்தில் உள்ள, வடிகான்களை சீரமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்ட போதே குறித்த பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

அவற்றை, மேலதிக விசாரணைகளுக்காக சிறைச்சாலைகள் தலைமையகத்திடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணி வரை **கிளிநொச்சி பிரதேசத்தில்** பாலாவி, பொன்னாவெளி ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் நீரிழிவு தொடர்பான விழிப்புணர்வு நடை பயணம்




(குருமன்காடு)

நீரிழிவு நோய் தொடர்பான, விழிப்புணர்வு நடை பயணம் ஒன்று வவுனியாவில் இடம்பெற்றது. வவுனியா மருத்துவர் சங்கத்தின் ஏற்பாட்டில் வவுனியா மருத்துவமனை முன்பாக நேற்றுக் காலை ஆரம்பித்த விழிப்புணர்வு நடை பயணம் கண்டி வீதி ஊடாக வவுனியா நகரை அடைந்து இரண்டாம் குறுக்குத்தெரு, கந்தசாமி கோவில் வீதி, பசார் வீதி, மில் வீதி, ஹொரவப்பொத்தானை வீதி என்பவற்றினூடாக மீண்டும் வவுனியா மருத்துவம்னையை வந்தடைந்தது.

தொற்றா நோய் ஆகிய நீரிழிவு நோயானது தற்போது நாடளாவிய ரீதியில் அதிகரித்து வருகின்றது. வவுனியாவிலும் இந் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

மக்களது வாழ்க்கை முறையும் தவறான உணவுப் பழக்க வழக்கமுமே இந்த நோய் ஏற்படுவதற்கு முக்கிய காரணம் எனவும் இது தொடர்பில் ஆரம்பத்திலேயே விழிப்பாக இருக்க வேண்டும் என வலியுறுத்தி குறித்த விழிப்புணர்வு நடை பயணம் இடம் பெற்றது. (4-6-250)

# மோட்டர் திருட்டு; சந்தேகநபர் கைது



(தருமபுரம்)

கடந்த ஒரு மாத காலமாக தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பல பகுதிகளில் மோட்டர் திருட்டில் ஈடுபட்ட சந்தேக நபரை தருமபுரம் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய பிரமந்தனாறு பகுதியில் வைத்து பொலிஸார் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபரை கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவக்கை எடுக்கப்பட்டதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி.எம்.சதுரங்க தெரிவித்துள்ளார். (4-6-316)

# உருவச்சிலை திரைநீக்கமும் நூல் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

கிளி.பளை மத்திய கல்லூரியின் அதிபர் "பொற்கால நாயகன்" அமரர். பொ.செல்லையாவின் உருவச்சிலை திரைநீக்கமும் நூல் வெளியீடும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் பாடசாலை முன் வளாகத்தில் கல்லூரி அதிபர் க.உதயகுமாரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (4)

# தெய்வீக திருக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் முன்னெடுக்கும் தெய்வீகத் திருக்கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை மாலை 4 மணி தொடக்கம் 6 மணிவரை நல்லூர் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய.அனிருத்தனன் தலைமையில் நடைபெறவுள்ளது. (4)

# முன்பள்ளி சிறார்களின் நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவிலில் அமைந்துள்ள குட்டிச்சுட்டி முன்பள்ளிகளின் அகம் குழந்தைகள் பகல் நேரக் காப்பக மாணவர்களின் ''year end concert'' நிகழ்ச்சியானது எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் கோண்டாவில் சந்தியில் அமைந்துள்ள இராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக மன்னார் உதவித் தேர்தல் ஆணையாளர் வேலாயுதம் சிவராஜா கலந்து கொள்ளவுள்ளார். (4)



வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் ஆகியவற்றின் அனுசரணையுடன் மாந்தை மேற்கு பிரதேச செயலகமும் கலாசார பேரவையும் இணைந்து ஏற்பாடு செய்த மாந்தை மேற்கு பிரதேச கலாசார விழா நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாந்தை மேற்கு பிரதேச கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

(படம்:-ஜோசப் நயன்)

# வடையில் கரப்பான்; உணவகத்திற்கு சீல்

(யாழ்ப்பாணம்)

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழில் உள்ள பிரபல சைவ உணவகத்தில் ஒருவர் வாங்கிய வடையில் கரப்பான்பூச்சி இருந்ததைக் கண்ட நபர், இது தொடர்பில் யாழ்.நகர பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பா.சஞ்சீவனிற்கு முறைப்பாடு செய்தார்.

உடனே குறித்த உணவகத்திற்குச் சென்ற பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் கடையினை பரிசோதனை செய்து நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்வதற்கு முடிவு செய்தனர்.

இதனையடுத்து நேற்று முன்தினம் யாழ்.மேலதிக நீதிவான் நீதிமன்றில் யாழ்.நகர பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பா.சஞ்சீவனினால் கடை உரிமையாளரிற்கு எதிராகவும் சமையல்கூட உரிமையாளரிற்கு எதிராகவும் பல்வேறு குற்றச்சாட்டுகளுடன் தனித் தனியாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இதனையடுத்து இரு வழக்குகளையும் விசாரித்த நீதிவான் குறித்த கடையினையும் சமையல்கூடத்தினையும் மறு அறிவித்தல் வரை தற்காலிகமாக உடன் சீல் வைத்து மூடுமாறு உத்தரவிட்டதுடன் இரு சந்தேக நபர்களையும் தலா ஒரு இலட்சம் ஆட் பிணையில் செல்ல அனுமதித்தார்.

வழக்கு எதிர்வரும் ஜனவரி மாதம் 25 ஆம் திகதிக்கு நீதிமன்றால் ஒத்தி வைக்கப்பட்டது.

இதனையடுத்து பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் குறித்த கடையும் சமையல்கூடமும் சீல் வைத்து மூடப்பட்டது. (4-6-104)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 150 | 150 | 200 |
| உருளைக்கிழங்கு | 170 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 250 | 250 | 200 | 250 |
| தக்காளி | 200 | 240 | 240 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 150 | 200 | 200 |
| கோவா | 180 | 220 | 280 | 250 |
| கரட் | 200 | 380 | 400 | 400 |
| பூசணி | 100 | 140 | 100 | 120 |
| புடோல் | 200 | 250 | 150 | 200 |
| வாழைக்காய் | 150 | 120 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 650 | 500 | 700 | 650 |
| பெரிய வெங்காயம் | 300 | 200 | 180 | 250 |
| பாகற்காய் | 600 | 450 | 500 | 600 |
| வெண்டக்காய் | 150 | 120 | 140 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 120 | 160 |
| பயற்றங்காய் | 350 | 240 | 250 | 320 |
| லீக்ஸ் | 400 | 350 | 450 | 450 |
| பீற்றூட் | 400 | 400 | 400 | 400 |
| கறிமிளகாய் | 800 | 700 | 700 | 600 |
| முருங்கைக்காய் | 800 | 700 | 650 | 800 |
| போஞ்சி | 200 | 240 | 220 | 240 |
| கத்தரிதம்புள்ள | 140 | 100 | -- | 160 |
| கீரை - 1 பிடி | 180 | 150 | 180 | 240 |
| தேசிக்காய் | 300 | 200 | 160 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 90 | 60 | 70-90 |
| இராசவள்ளி | 300 | 300 | 300 | 250 |
| வெங்காயப்பூ | -- | -- | 420 | -- |
| முள்ளங்கி | 200 | 240 | 200 | 250 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 100 | 80 |
| வல்லாரை | 50 | 50 | 50 | 40 |
| ஈரப்பலா | 80 | 160 | 120 | 160 |


# மணிவிழா வாழ்த்து

திரு. தம்பிராசா சோதிலிங்கம்



பிறந்த திகதி:- 08.12.1962

முதல் நியமனம்:- 17.08.1988

Best Wishes

ஆசிரியர் சேவை

| பாடசாலை | காலம் |
|---|---|
| யா/எழுதுமட்டுவாழ் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை | 17.08.1988-30.06.1989 |
| யா/எழுதுமட்டுவாழ் ஸ்ரீ கணேச வித்தியாலயம் | 01.07.1989-04.12.2003 |

அதிபர் சேவை

05.12.2003-08.12.2022

யா/எழுதுமட்டுவாழ் ஸ்ரீ கணேச வித்தியாலயத்திலிருந்து ஓய்வுபெறும் அதிபரை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

தென்மராட்சி அதிபர் சங்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடற்றொழிலுக்கு...

களம் அறிவுறுத்தியுள்ளது.

வங்காள விரிகுடாவின் தென் கிழக்கு கடற்பிராந்தியத்தில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வு நிலை சூறாவளியாக வலுவடைவதால் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த கடற்பிராந்தியத்தில் காற்றின் வேகமானது மணித்தியாலத்திற்கு 80 கிலோமீற்றர் வரை வீசக்கூடும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

தற்போது வடக்கு மற்றும் கிழக்கு கடற்பரப்புகளில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும் மீனவர்களை உடனடியாக கரைக்குத் திரும்புமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வட மாகாணம் மற்றும் திருகோணமலை மாவட்டத்தின் சில இடங்களில் இன்று 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும் என எதிர்வுகூறப்பட் டுள்ளது.

வடக்கு, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் இடைக்கிடையே மணித்தியாலத்திற்கு 50 முதல் 60 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது. (ம-7)

## லிட்ரோ எரிவாயு...

ளார்.

இதற்கமைய எதிர்வரும் ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் சமையல் எரிவாயு கொள்கலன்களின் விலைகள் குறைவடையக்கூடும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

## பாடசாலை...

கிராமப்புற பாடசாலைகளுக்கும் பரவியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாடசாலை மாணவர்கள் போதைப் பொருளுக்கு அடிமையாகும் போக்கு நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகக் குறிப்பிடும் வைத்திய நிபுணர் கலாநிதி தீபால் பெரேரா இதனைத் தடுப்பதற்கு வலையமைப்புத் திட்டமொன்று தேவைப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## தருமபுரத்தில்...

மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவர் உடைமையில் வைத்திருந்த 900 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது.

அவரிடமிருந்து பதினையாயிரம் ரூபாய் பணமும் அவர் பயணித்த மோட்டார் சைக்கிள் தொலைபேசி ஐஸ் போதைப்பொருள் பயன்படுத்தும் போது படமாக ஆக்கப்பட்ட படத்தட்டு (சிடி) பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

சந்தேக நபரை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,316)

## மின்சார பட்டிய...

மின்சார சபைக்கு வெளியே மேற்கொள்ள வேண்டிய பணிகளை தற்போதுள்ள ஊழியர்களை பயன்படுத்தி மேற்கொள்ளவும், தற்போது முன்னெடுக்க முடியாத பணிகளை பிரதேச சபைகளின் உதவியுடன் மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை மின்சார சபையின் உயர் மட்ட அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது இந்த தீர்மானங்கள் எடுக்கப்பட்டதாக அமைச்சர் காஞ்சன விஜேசேகர தமது டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளார். (ம-7)

## யாழில் 30க்கு...

புதன்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே இதனை தெரிவித் தார்.

இது குறித்து மேலும் தெரிவிக்கையில், வெளிநாட்டுக்கு செல்வதற்காக முப்பதுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் நீர்கொழும்பு கொச்சிக்கடைப் பகுதியிலுள்ள முகவரிடம் 56 இலட்சம் ரூபாய் பணத்தை வழங்கினோம்.

பல தடவைகள் நாம் கொழும்புக்கு சென்றபோதும் எம்மை வெளிநாட்டுக்கு அனுப்பாமல்முகவர்கள் அலைக்கழித்தனர். கொடுத்த பணத்தை திருப்பிக் கேட்டபோது எம்மை அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டனர். ஆகவே பணத்தை மீட்டுத்தர சம்பந்தப்பட்ட தரப்பினர் உதவ வேண்டும் என்றார். (ம-7,33)

## யாழில் சட்டத்...

குறித்த காணியை 2021 ஆம் ஆண்டு விற்பனை செய்துள்ளதாக காணி உறுதி முடிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் காணியை வாங்கியவர் மற்றும் சாட்சி கையொப்ப மிட்ட வர்கள் என நால்வர் கடந்த சில தினங்களுக்கு முன்னர் கைதாகியிருந்த நிலையில், அதற்கு உடந்தையாக இருந்து பதிவுகளை மேற்கொண்ட சட்டத்தரணி நேற்றைய தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சட்டத்தரணி கடந்த சில வாரங்களுக்கு முன்னரும் காணி மோசடி வழக்கின் கீழ் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## ரணில் அரசை...

மேலும் தெரிவிக்கையில்,

இன்று வரவு - செலவுத் திட்டத்தின் வாக்கெடுப்பில் கஜேந்திரகுமாரின் கட்சி தவிர்ந்த மற்றைய தமிழ்க் கட்சிகளுடன் பேசியே முடிவு எடுப்பேன். எப்படியும் பாதீட்டை எதிர்க்கமாட்டேன்.

இந்த அரசு வீழ்வதற்கு நான் ஒரு காரணமாக இருக்க மாட்டேன். ஏனெனில், இந்த அரசை விட்டால் அடுத்து வரும் அரசு இதனிலும் பார்க்கக் கேவலமான அரசாக இருக்கக்கூடும் என்று நான் எண்ணுகின்றேன். அவ்வாறான ஒரு நிலைமை ஏற்பட்டால் நாட்டின் நிலைமை இன்னும் சீர் கெடும். தற்போது இருக்கும் ரணிலைத் தொடர்ந்து இருக்கச் செய்து பொருளாதார ரதியாக சில நன்மைகளைப் பெற்றுக் கொள்ள அவருடன் சேர்ந்து செல்ல வேண்டிய அவசியமும் எங்களுக்கு இருக்கின்றது.

நாங்கள் எதிர்பார்க்கும் எல்லாவற்றையும் சிங்கள அரசுகளிடமிருந்து எடுக்க முடியாது. அதற்காக அவர்களுக்கு எதிராக இருந்து கொண்டும் அவர்களிடம் இருந்து எதனையும் பெற்றுக் கொள்ளவும் முடியாது.

தமிழ்மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் என்று உண்மையாகவே நினைத்தால், ஒற்றையாட்சிக்குப் புறம்பான ஓர் ஆட்சி முறையை எவ்வாறு நாங்கள் பேசி ஒரு முடிவுக்கு வரலாம் என்பதை அவர்கள் (அரசு) முன்வைத்தால்தான் அவ்வாறான பேச்சுக்களுக்கு நாங்கள் செல்ல முடியும் என்று தெரிவித்துள்ளார். (ம-7)

## அரசின் சதியில்...

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சபாநாயகரின் அறிவிப்பின்போது, அரசியலமைப்பு பேரவைக்கு உறுப்பினர்களை நியமிப்பது தொடர்பில் சபாநாயகரினால் அறிவிக்கப்பட்ட விடயத்தை விமர்சித்து கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், அரசியலமைப்பு பேரவைக்கு உறுப்பினர்களை நியமிப்பதை அவசரப்படுத்த வேண்டாம். இது தொடர்பில் கால அவகாசம் வழங்க வேண்டும்.

ஏனெனில், ஆளும் தரப்பில் இருந்து 40பேர் சுயாதீன உறுப்பினர்களாக எதிர்த்தரப்பில் அமர்ந்துள்ளனர். அதனால் அவர்களுடன் இது தொடர் பில் கலந்துரையாட இருக்கின்றது. அதனால் இந்த விடயத்தை அவசரப்படுத்த வேண்டாம். அத்துடன் அரசாங்கம் சுயாதீன ஆணைக்குழுக்களை நியமித்தும் தேர்தல் ஆணைக் குழுவை நியமித்தும் உள்ளூராட்சி மன்ற தேர்தலை பிற்போடுவதற்கு அரசாங்கம் திட்டமிட்டு வருவதாக மக்கள் மத்தியில் சந்தேகம் எழுந்துள்ளது.

அதனால் அரசாங்கத்தின் சதித்திட்டங்களில் சபாநாயகராகிய நீங்கள் சிக்கிக்கொள்ள வேண்டாம் என்றார். (ம-7)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 07/12/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1417
விருச்சிகம் 6 4 9 7 3 0
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி -2022.12.07
சீட்டிழுப்பு இலக்கம் - 992
H 13 34 40 64
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2022.12.07
சீட்டிழுப்பு இலக்கம் 3204
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
G 15 19 29 50
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 07/12/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1310
U 01 01 11 28 30

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.12.07
சீட்டிழுப்பு இலக்கம் 271
மிதுனம் 23 27 32 54 மிதுனம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2022/12/07
சீட்டிழுப்பு இலக்கம் 4962
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
W 4 4 1 8 0 4
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1937
நிறம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2022.12.07
தினம் புதன்கிழமை
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை
ரூ. 2,946,300/-
P 27 34 52 71
5409 540

சனிதா
புதன்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.12.07
சீட்டிழுப்பு இல : 4098
ரூ. 34,825,111.40
வெற்றி இலக்கங்கள்
35 67 70 73 S

ராசி
திகதி 2022-12-07
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,000,000/-
வெற்றி வாரம் 3649
வெற்றி இலக்கங்கள் 06 17 23 50
மகரம்
வர்ணம் பச்சை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,992,840/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
P 24 03 04 45 67
சுப்பர் இலக்கம்
1113
2022.12.07
புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 283,678,757.80
தொலை பேசி 011-2 333 546-47
Web : www.dlb.lk

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1877
சீட்டிழுப்பு திகதி 2022-12-07
வெற்றி இலக்கங்கள் 25 28 29 48 V
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 37,738,660/-
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
சீட்டிழுப்பு இல : 1763
சீட்டிழுப்பு திகதி : 2022.12.07
ரூ. 2,129,280/-
வெற்றி இலக்கங்கள்
07 11 22 42 P


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14 வயது சிறுமி வன்புணர்வு வங்கி முகாமையாளர் கைது

(கொழும்பு)

கொழும்பில் உள்ள அரச பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் 14 வயது சிறுமியை பாலியல் வன்புணர்விற்கு உட்படுத்தியதாக வங்கி முகாமையாளர் ஒருவரை பம்பலப்பிட்டி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அத்தோடு, சிறுமி களுபோவில போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரின் மனைவி உயிரிழந்துள்ளதாகவும் அவர் 13 மற்றும் 17 வயதுடைய இரண்டு பெண் பிள்ளைகளின் தந்தை எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குறித்த 14 வயது சிறுமி கொழும்பை அண்மித்த பிரதேசத்தில் வசிப்பவர் எனவும் தெரியவந்துள்ளது.

இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பம்பலப்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

# குவைத் தூதராக காண்டீபன் நியமனம்

(கொழும்பு)

நான்கு நிறுவனங்களுக்கான தலைவர்கள் மற்றும் ஒரு தூதரை நியமிக்க உயர் பதவிகளுக்கான பாராளுமன்றக்குழு ஒப்புதல் அளித்துள்ளது.

அதன்படி, குவைத்துக்கான இலங்கை தூதுவராக காண்டீபன் பாலசுப்ரமணியத்தை நியமிக்க உயர் பதவிகளுக்கான குழு ஒப்புதல் அளித்தது. (ம-7)

# காரைநகரில் மாடு வெட்டிய குற்றச்சாட்டில் ஒருவர் கைது

ஊர்காவற்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட காரைநகர் - நெடுங்காடு பகுதியில் இறைச்சிக்காக மாட்டினை வெட்டிய குற்றச்சாட்டின் கீழ் சந்தேகநபர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்தின் கண்காணிப்பின் கீழ் இயங்கும் காரைநகர் பொலிஸ் காவல் அரண் பொலிஸாரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

சுற்றிவளைப்பின்போது இருவர் தப்பிச் சென்றுள்ள நிலையில் வீட்டின் உரிமையாளர் மாட்டு இறைச்சியுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)



யாழ். மாநகர முதல்வர் வி. மணிவண்ணன் அவர்களின் தூய அழகிய மாநகரம் எனும் துரித அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் கீழ் வழவமைக்கப்பட்ட நகரக் குளம் நிர்மாணப் பணிகளுக்கான அடிக்கலானது நேற்று நாட்டப்பட்டது.

இத்திட்டமானது மூன்று மாதங்களுக்குள் பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது. குறித்த திட்டம் 100 மில்லியன் ரூபா செலவில் மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7.33.104)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-5447)

076 825 7716 (ஆகாஸ்)

சாரதி தேவை

wheel loder சாரதி தேவை தங்கியிருந்து வேலை செய்யக் கூடியவர்கள் விரும்பத்தக்கது.

சிற்றி ஹாட் வெயர் அன் ஸ்ரோர்ஸ்
இல. 55,37 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (C-5442)

076 762 8282

வீட்டுடன் காணி விற்பனைக்கு

மானிப்பாய் விதி ஆனைக்கோட்டையில் அமைந்துள்ள மூன்று அறைகளுடன் கூடிய வீடும் அதனுடன் இணைந்த 2 பரப்பு காணியும் விற்பனைக்குண்டு. (13710)

075 071 9904

பராமரிப்பாளர் தேவை

நடக்க முடியாத முதியவரை வீட்டில் வைத்து பராமரிப்பதற்கு அனுபவம் உள்ளவர் தேவை

தகுதி:- 40 வயதிற்குட்பட்ட ஆண்
சம்பளம்:- 50,000/= (C-5440)

தொடர்புகளுக்கு:- 0761999450

காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கோயிலாக்கண்டி பகுதியில் 132 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

நிலப்பரப்பு

- A32 பிரதான வீதியில் இருந்து 600m தூரம்.
- 18 அடிப் பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- A32 பிரதான வீதியில் இருந்து இரு வழிப் பாதைகள் உள்ளன.
- நெய்தல் பீச்சுக்கு (Beach) அருகாமையில் உள்ளது.
- கோயிலாக்கண்டியில் இருந்து யாழ். நகரத்திற்கும் சாவகச்சேரி நகரத்திற்கும் அரச தனியார் பஸ் போக்குவரத்துச் சேவை உள்ளது.
- இக் காணியின் தெற்கு எல்லை கடற்கரை (பீச்)
- நல்ல தண்ணீர் ஊற்றுச்சூழல் (கட்டுக் கிணறும் உள்ளது)

ஒரு பரப்பின் விலை 675,000 ரூபாய் மட்டும்

தரகர் தேவையில்லை (13711)

பார்வையிடும் நேரம்
காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

தொடர்பு - ஜெயம்

077 814 7389, 077 986 5457

பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு

A/L எடுத்தவர்கள் மட்டும் - 6 மாத பயிற்சி

விமானப் பயணச்சீட்டுக்கள் விரைவுப் பொதிகள் சேவை விசா சேவைகள் (C-5441)

V2 TRAVELS

எமது கிளைகள்

● பயிற்சிக்கால ஊக்கத்தொகை -20,000/-
● பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
● பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
● வேலையின்போது ஆரம்ப சம்பளம் -25,000/-

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம். 0777-068-777

தேவை

யாழ். திருநெல்வேலியில் பரமேஸ்வரா சந்தியிலுள்ள நிறுவனத்திற்கு

- A/L படித்த பெண் பணியாளர்
- வயரிங், பிளம்பிங் தெரிந்த வேலையாள்
- சமையல் வேலை தெரிந்த தொழிலாளி (ஆண்/பெண்) (13712)

074 368 0029

வீடு/கட்டடம் தேவை

யாழ் நகரம் அண்டிய பகுதிகளில் சமையல் தொழில் செய்வதற்கு சகல வசதிகளுடனும், விசாலமான வீடு/ கட்டடம் நீண்டகால அடிப்படையில் உடனடியாகத் தேவைப்படுகிறது. (C-5428)

தொடர்புகளுக்கு
076 709 3368

உடனடி வேலை வாய்ப்புக்கள்

EXECUTIVE OFFICER

✔ சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
✔ வயது-22 தொடக்கம் 35
✔ தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது) (C-5439)

V2 TRAVELS

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம் 0777-068-777


# மரண அறிவித்தல்

## திருமதி லிங்கேஸ்வரி பொன்னுத்துரை



கைதடி வடக்கைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் வடக்கு நவசக்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லிங்கேஸ்வரி பொன்னுத்துரை அவர்கள் நேற்று (07.12.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னாரது இறுதிக் கிரியை பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

(C-5445)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.12.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.